
# தமிழ்த்துளி

## வகுப்பு - 2

## தமிழ் - மூன்றாம் மொழி

முதல் பதிப்பு - 2025



# நூல் அறிமுகம்

மொழி, கல்வி மற்றும் அறிவைப் பரப்புவதற்கும், சேகரிக்கப்பதற்கும் ஒரு முக்கிய கருவி ஆகும்.

மொழியின் வளர்ச்சிப்பாதை பேச்சு, எழுத்து, புரிதல் மற்றும் விளக்கம் என்னும் படிகளைக் கொண்டது.

கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்பதே மொழியைக் கற்றலின் இயல்பான முறை ஆகும்.

இந்த இயல்பான முறையைக் கருத்தில் கொண்டே தமிழ் என்னும் கடலில் மூழ்கிச் சிறு துளியை எடுத்து மாணவச் செல்வங்கள் எளிமையாகக் கற்றுப் பயன் பெறும் வகையில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை மூன்றாம் மொழிப் பாடமாக வடிவமைக்கப்பட்டதே **‘தமிழ்த்துளி’**.

உயிர் எழுத்துகள் அவற்றின் சிறப்புக் கருதியும் ஒன்றுக்கொன்று இனமாதல் கருதியும் எழுத்துகளை அகரம் தொடங்கி னகரம் வரை வரிசைப்படுத்திக் கூறுதலே வரிசை முறை என்கிறது தமிழ் இலக்கண நூலான நன்னூல். இதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டதே இந்தப் பாடநூல்.

சென்னை | ஜூன் 2025

செயலாளர்
ஆர்ய சமாஜ் சேவா பவுண்டேஷன்

# Acknowledgements

**Lead Content Contributor**

Smt P Premalatha , M.A ., B.Ed

**Content Contributors**

Smt L Chandra , M.A.,B.Ed.,

Smt Geetha Venukumar , B.Com., M.A., M.Ed.,
Diploma in Primary & Elementary Montessori Education, Hindi ( Praveen )

**Design and Technical Support**

Smt. R Dharshini Ragamathy, B.Sc., M.A

**Wrapper Design**

Ms.Hamsavani Raman and Team

# பொருளடக்கம்


| வ.எண் | பாடத்தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | மீள்பார்வை - 1<br>உயிர் எழுத்துகள் , மெய் எழுத்துகள்<br>உயிர்மெய் எழுத்துகள் | 7 |
| | மீள்பார்வை - 2<br>உயிர் எழுத்துகள் , மெய் எழுத்துகள்<br>உயிர்மெய் எழுத்துகள் - சொற்கள் | 10 |
| | வடமொழி எழுத்துகள் மற்றும் சொற்கள் | 13 |
| 1 | பார் ! பார் ! | 15 |
| 2 | மரம் ஏறலாம் | 16 |
| 3 | ஆத்திசூடி | 17 |
| 4 | எழுத்துகளின் வகை | 21 |
| 5 | கொடி காத்த குமரன் | 32 |
| 6 | உரையாடல் - காய்கள் , பழங்கள் | 34 |
| 7 | வண்ணங்கள் | 37 |
| 8 | அன்பை விதைப்போம் | 41 |
| 9 | வீடு எங்கே ? | 46 |
| 10 | சின்ன சின்ன கடிகாரம் | 47 |
| 11 | புதிய ஆத்திசூடி | 48 |

| வ.எண் | பாடத்தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 12 | எண் | 51 |
| 13 | ஓடி விளையாடு பாப்பா | 57 |
| 14 | ஆங்கில மாதங்கள் | 59 |
| 15 | உடல் உறுப்புகள் | 60 |
| 16 | உரையாடல் - விலங்குகள் , பறவைகள் | 65 |
| 17 | மரம் வளர்ப்போம் | 71 |

# மீள்பார்வை - 1 (RECAP -1)

## உயிர் எழுத்துகள் – 12

(Uyir Ezhuthugal) (Vowels)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |

## மெய் எழுத்துகள் - 18

(Mei Ezhuthugal) ( Consonants)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் |
| த் | ந் | ப் | ம் | ய் | ர் |
| ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |

- அ முதல் ஔ வரை - எழுதவும்
- க் முதல் ன் வரை - எழுதவும்

# உயிர்மெய் எழுத்துகள்

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | ம | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

# எழுதிப் பழகவும்



- க முதல் கௌ வரை
- ப முதல் பௌ வரை
- ம முதல் மௌ வரை
- ச முதல் சௌ வரை
- த முதல் தௌ வரை
- ந முதல் நௌ வரை

# மீள்பார்வை - 2 (RECAP -2)

## சொற்கள்

## உயிர் எழுத்துகள் – 12


(Uyir Ezhuthugal) (Vowels)



| | | |
|---|---|---|
|  அகல் Lamp |  ஆடு Goat |  இலை Leaf |
|  ஈசல் Winged White Ant |  உணவு Food |  ஊசி Needle |
|  எருமை Buffalo |   ஏடு Book |  ஐந்து Five |
|  ஒட்டகம் Camel |  ஓலை Palm leaf |  ஔவையார் Tamil Poet |

- சரியான ஒலிப்பு முறையுடன் படிக்கவும்

# மெய் எழுத்துகள் - 18
(Mei Ezhuthugal)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் |
| த் | ந் | ப் | ம் | ய் | ர் |
| ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |

| | | |
|---|---|---|
|  கொக்கு Crane |  மாங்காய் Raw Mango |  பச்சை Green |
|  ஊஞ்சல் Swing |  பட்டம் Kite |  மண் Soil |
|  பத்து Ten |  பந்து Ball |  பப்பாளி Papaya |

| | | |
|---|---|---|
|  நடனம் Dance |  காய்கறிகள் Vegetables |  ஆசிரியர் Teacher |
|  வானவில் Rainbow |  செவ்வாழை Red Banana |  நீர்வீழ்ச்சி Water Fall |
|  வெள்ளரிக்காய் Cucumber |  நாற்காலி Chair |  சூரியன் Sun |

- சரியான ஒலிப்பு முறையுடன் படிக்கவும்

# வடமொழி எழுத்துகள் மற்றும் சொற்கள்

ஜ ja ஸ sa ஷ sha ஹ ha

ஸ்ரீ sri க்ஷ ksha

## எழுத்து வரிசை

ஜ - ஜ ஜா ஜி ஜீ ஜு ஜூ
ஜெ ஜே ஜை ஜொ ஜோ ஜௌ

ஷ - ஷ ஷா ஷி ஷீ ஷு ஷூ
ஷெ ஷே ஷை ஷொ ஷோ ஷௌ

ஸ - ஸ ஸா ஸி ஸீ ஸு ஸூ
ஸெ ஸே ஸை ஸொ ஸோ ஸௌ

ஹ - ஹ ஹா ஹி ஹீ
ஹு ஹூ ஹெ ஹே
ஹை ஹொ ஹோ ஹௌ



ஜன்னல்
Window



ரோஜா
Roja



ஜிலேபி
Jilebi



நேதாஜி
Netaji



ஹவன்
Havan



ஹல்வா
Halva



ஹார்மோனியம்
Harmonium




ஹிந்தி
Hindi





ஸர்பம்
Snake

# 1. பார் பார்



தரையின் மேலே
தொட்டி பார்
தொட்டி மேலே
செடியைப் பார்
செடியின் மேலே
பூவைப் பார்
பூவின் மேலே
வண்டைப் பார்
வண்டின் மேலே
பளபளக்கும்
வர்ணம் உண்டு
அதையும் பார் !






அழ. வள்ளியப்பா


# 2. மரம் ஏறலாம்




தென்னைமரத்தில் ஏறலாம்
தேங்காயைப் பறிக்கலாம்.
மாமரத்தில் ஏறலாம்
மாங்காயைப் பறிக்கலாம்.
புளியமரத்தில் ஏறலாம்
புளியங்காயைப் பறிக்கலாம்.
நெல்லிமரத்தில் ஏறலாம்
நெல்லிக்காயைப் பறிக்கலாம்.
வாழைமரத்தில் ஏறினால்
வழுக்கி வழுக்கி விழுகலாம் !






அழ. வள்ளியப்பா

# 3. ஆத்திசூடி

## ஆத்திசூடி

அறம் செய விரும்பு

ஆறுவது சினம்

இயல்வது கரவேல்

ஈவது விலக்கேல்

உடையது விளம்பேல்

ஊக்கமது கைவிடேல்

எண் எழுத்து இகழேல்

ஏற்பது இகழ்ச்சி

ஐயம் இட்டு உண்

ஒப்புரவு ஒழுகு

ஓதுவது ஒழியேல்

ஔவியம் பேசேல்

அஃகம் சுருக்கேல்



\- ஔவையார்

## சொல்லும் பொருளும்

1. சினம் - கோபம்
2. ஊக்கம் - முயற்சி
3. ஈவது - கொடுப்பது
4. ஓதுவது - படிப்பது

## பயிற்சிகள்

### அ. படம் பார்த்து உரிய ஆத்திசூடியைப் பொருத்துக.

1) 


- ஆறுவது சினம் ◯

2) 

- ஊக்கமது கைவிடேல் ◯

3) 

- ஏற்பது இகழ்ச்சி ◯

4) 

- எண் எழுத்து இகழேல் ◯

## ஆ. நிரப்புக.

| இட்டு , ஒழுகு , விரும்பு , பேசேல் , கரவேல் |
|---|

1. அறம் செய ________________
2. இயல்வது ______________________
3. ஐயம் ______________ உண் .
4. ஒப்புரவு __________________
5. ஔவியம் __________________

## இ. விடுபட்ட எழுத்தை நிரப்புக.

1. அ ☐ ம் ( ர , ற )

2. சி ☐ ம் ( ண , ன )

3. விலக்கே ☐ ( ல் , ள் )

4. ஒ ☐ யேல் ( லி , ழி )

## படம் பார்த்து உனக்குத் தெரிந்ததைக் கூறுக.



# 4. இலக்கணம் - எழுத்துகளின் வகை

## உயிர் எழுத்துகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |

## குறில், நெடில் எழுத்துகள்

| குறில் | நெடில் |
|---|---|
| அ , இ , உ , எ , ஒ | ஆ , ஈ , ஊ , ஏ, ஐ , ஓ , ஔ |

# மெய் எழுத்துகள் – 18

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் |
| த் | ந் | ப் | ம் | ய் | ர் |
| ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |

**மெய் எழுத்துகள் மூன்று வகைப்படும். அவை**

## வல்லினம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | ச் | ட் | த் | ப் | ற் |

## மெல்லினம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ங் | ஞ் | ண் | ந் | ம் | ன் |

## இடையினம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ய் | ர் | ல் | வ் | ழ் | ள் |

# பயிற்சிகள்

## அ. வகைப்படுத்துக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |

| குறில் | நெடில் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

## ஆ. வகைப்படுத்துக.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் |
| த் | ந் | ப் | ம் | ய் | ர் |
| ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |


இ. படத்திற்குப் பொருத்தமான உயிர்க்குறிலை (அ , இ , உ ,எ , ஒ ) எடுத்து எழுதுக.

1. 

[ ] லை

2. 

[ ] லகம்

3. 

[ ] லை

4. 


[ ] ட்டகம்


5. 


[ ] லி

ஈ. படத்திற்குப் பொருத்தமான உயிர் நெடிலை (ஆ , ஈ , ஊ , ஏ , ஐ , ஓ , ஔ) எடுத்து எழுதுக .

1.  ☐ சல்

2.  ☐ மை

3.  ☐ ணி


4.  ☐ தல்

5.  ☐ ந்து

6.  ☐ வையார்


7.  ☐ ணான்


உ. படத்திற்குப் பொருத்தமான வல்லின மெய்களை ( க், ச் , ட் , த் , ப் , ற் ) எடுத்து எழுதுக .

1.  வா [ ] து

2.  வெ [ ] றிலை

3.  நா [ ] கு

4.  பூ [ ] சி

5.  ப [ ] டம்

6.  செரு [ ] பு


**ஊ. படத்திற்குப் பொருத்தமான மெல்லின மெய்களை ( ங் , ஞ் , ண் , ந் , ம், ன் ) எடுத்து எழுதுக.**

1.  ச ☐ கு

2.  ம ☐ சள்

3.  சு ☐ டல்

4.  பா ☐ பு

5.  க ☐ று

6.  த ☐ தம்

எ. படத்திற்குப் பொருத்தமான இடையின மெய்களை ( ய் , ர் , ல், வ், ழ் , ள் ) எடுத்து எழுதுக.

1. 

குழா ☐

2. 

ப ☐

3. 


மு ☐

4. 

தே ☐

5. 

தா ☐ ப்பாள்

6. 

செ ☐ வானம்

**ஏ. பின்வரும் சொற்களை உயிர்க்குறில், உயிர் நெடில் என வகைப்படுத்துக.**

**ஆந்தை , இரவு , ஈகை ,**
**உழவு, ஐவர், ஔடதம் ,**
**அன்னை, ஊர் , ஓட்டம்,**
**ஏழு , ஒலி, எண்ணெய்**

| உயிர்க்குறில் | உயிர் நெடில் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

ஐ. பின்வரும் சொற்களை வல்லின, மெல்லின , இடையினமாக வகைப்படுத்துக.


மார்பு, நன்றி, செவ்வாழை, பாய், தந்தி, மரம், நுங்கு, நேற்று , பள்ளி ,பல்லி, வண்டி , கஞ்சி, பாக்கு, பூட்டு, பத்து, கேழ்வரகு, பச்சை , உப்பு

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

# 5. கொடி காத்த குமரன்



தேசியக் கொடியைக் காப்பதற்காகத் தன் உயிரைத் தியாகம் செய்தவர் குமரன். இவர் ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் 1904ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 4ஆம் நாள் பிறந்தார்.



குடும்ப வறுமை காரணமாக ஆரம்பப் பள்ளி வரையே படித்தார். திருப்பூரில் உள்ள நூற்பாலையில் பணி புரிந்தார்.



1932ஆம் ஆண்டு திருப்பூரில் நடந்த விடுதலைப்போராட்டத்தில், கையில் தேசியக்கொடியினை ஏந்திக்கொண்டு போராடினார். அப்போது காவலர்கள் குமரனைத் தடியால் தலையில் அடித்தனர்.

தேசியக் கொடியைக் கீழே விடாமல் ‘வந்தே மாதரம் , வந்தே மாதரம்’ என்று கூறியவாறே உயிர் நீத்தார். இதனால், 'கொடி காத்த குமரன்' என்று அழைக்கப்படுகிறார்.



# பயிற்சிகள்

## அ. சொல்லும் பொருளும் .

1. திங்கள் - மாதம்
2. பணி - வேலை

## ஆ. உரிய விடையை எடுத்து எழுதுக .

| ஈரோடு , திருப்பூரில் , தேசியக்கொடி , தலையில் |
|---|

1. குமரன் ..................... மாவட்டத்தில் பிறந்தார்.
2. காவலர்கள் குமரனைத் தடியால் ...............அடித்தனர்.
3. குமரன்..................... உள்ள நூற்பாலையில் பணி புரிந்தார்.
4. குமரன் கையில் .......................... இருந்தது.

# 6. உரையாடல்

கலந்து உரையாடலாம் வாருங்கள்.

( அன்று விடுமுறை நாள் . பாட்டியின் கிராமத்திற்குச் சென்ற கவிதா காலையில் எழுந்தாள் . அம்மாவிடம் சென்று )

கவிதா : அம்மா ! அம்மா ! இன்று நானும் அப்பாவுடன் கடைக்குச் செல்கிறேன்.

அம்மா : சரி ! சரி ! போய் வா .

(அப்பாவும் ,கவிதாவும் கடைத்தெருவிற்குச் சென்றனர்.)

கடைக்காரர் : வாங்க ஐயா ! என்ன வேணும் ?

அப்பா : வெண்டைக்காய் , தக்காளி , கத்திரிக்காய் - 1 கிலோ கொடுப்பா .

கவிதா : அப்பா ! Drumstick வாங்குங்க அப்பா !

கடைக்காரர் : பாப்பா ! Drumstick ன்னா என்ன ?

அப்பா : ஐயா ! Drumstick ன்னா முருங்கைக்காய் .

கடைக்காரர் : பழங்க வேணுமா ஐயா ?

கவிதா : Mango , Banana மட்டும் தாங்க .

கடைக்காரர் : பாப்பா எல்லா காய்களும் பழங்களும் சாப்பிடணும். சரியா

கவிதா : சரிங்க ஐயா !

அப்பா : வீட்டுக்குப் போனதும் காய்கறி ,பழம் எல்லாத்துக்கும் தமிழ்ப் பெயர் சொல்லித் தரேன் .

கவிதா : சரிங்க அப்பா !





# தெரிந்து கொள்வோம்.




| காய்கள் | பழங்கள் |
|---|---|
|  தக்காளி TOMATO |  மாம்பழம் MANGO |
|  பாகற்காய் BITTER GOURD |  வாழைப்பழம் BANANA |
|  முள்ளங்கி RADISH |  பலாப்பழம் JACK FRUIT |
|  வெங்காயம் ONION |  அன்னாசிப்பழம் PINE APPLE |
|  இஞ்சி GINGER |  கொய்யாப்பழம் GUAVA |

# பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. |  | கொய்யாப்பழம் | |
| 2. |  | வெங்காயம் | |
| 3. |  | பாகற்காய் | |
| 4. |  | தக்காளி | |
| 5. |  | வாழைப்பழம் | |
| 6. |  | அன்னாசிப்பழம் | |


# 7.வண்ணங்கள்


| | |
|---|---|
|  சிவப்பு |  தக்காளி |
|  பச்சை |  இலை |
|  நீலம் |  வானம் |
|  மஞ்சள் |  எலுமிச்சைப்பழம் |

| | |
|---|---|
|  ஊதா |  கத்திரிக்காய் |
|  கருப்பு |  காகம் |
|  வெள்ளை |  பால் |

# படம் வரைந்து வண்ணம் தீட்டுக.

1. இலை
2. மாம்பழம்
3. காகம்
4. கத்திரிக்காய்





# அகர வரிசைப்படுத்துக

காடு கிளி கல் கூடு கீரி

கொக்கு கை குரங்கு கேள்

கெண்டி கௌதாரி கோலம்

க - ____________________ கெ - ____________________

கா - ____________________ கே - ____________________

கி - ____________________ கை - ____________________

கீ - ____________________ கொ - ____________________


கு - ____________________ கோ - ____________________

கூ - ____________________ கௌ - ____________________

# 8. அன்பை விதைப்போம்





ஐ ! பூனைக் குட்டி. ஏற்கனவே ஒரு நாய், இதுல பூனை வேறயா? என்று அப்பா தொடங்கினார் .



செல்வா, "பூனையும் நாயும் ஒன்றோடு ஒன்று சண்டை போட்டுக்காதா?" இது அம்மாவின் டவுட். "எல்லாம் பழகினா சரியாப் போயிடும்மா" என்றான் செல்வன்.

"ஏய் மணி , உன் கூட விளையாட புது பிரெண்ட். ஜில்லு பாரு " நாயிடம் பூனையை அறிமுகம் செய்தான் செல்வன்.





நாய் குரைக்க, பூனை பயந்தது. அப்பாவின் கோபம் ஒரு பக்கம், அம்மாவின் டென்ஷன் மறுபக்கம் இருக்க, செல்வன் மட்டும் விடாமுயற்சியுடன் பூனையை நாயுடன் பழக்குவதில் உறுதியாக இருந்தான்.



ஒரு நாள் காலை, 'செல்வா' இங்கே பாரு, "மணியும், ஜில்லுவும் சேர்ந்து விளையாடுறாங்க"



இதே மாதிரி எல்லாரும் அன்பா இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும் என்றாள் அம்மா.

# பயிற்சிகள்

## அ. எதிர்ச்சொல் எழுதுக.

1. சரி X ......................
2. காலை X ......................

## ஆ. உரிய விடையை எடுத்து எழுதுக.

| விதைப்போம் , நாய் , மணி |
|---|

1. செல்வன் கையில் ................இருந்தது.
2. நாயின் பெயர் ............................
3. அன்பை ..............................

## தெரிந்து கொள்வோம்.

| | ஆங்கிலச்சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|---|
| 1 | டவுட் ( doubt ) | சந்தேகம் |
| 2 | பிரெண்ட் ( friend ) | நண்பன் |
| 3 | டென்ஷன் ( tension ) | பதற்றம் |

## சொல் உருவாக்குக

அ பா மா ப் ம

ப ட் ம் ர வீ டு

ய் லை பா ட

தா ல டை த்

வ ண் க ஊ ழ

கா ர் ல் ஆ

படம் பார்த்து உனக்குத் தெரிந்ததைக் கூறுக.



# இரண்டு எழுத்துச் சொற்கள்

| வ.எண் | ENGLISH | தமிழ் |
|---|---|---|
| 1 | WATER | நீர் |
| 2 | FOREST | காடு |
| 3 | STONE | கல் |
| 4 | MOUNTAIN | மலை |
| 5 | TABLE | மேசை |
| 6 | HOME | வீடு |
| 7 | WAVE | அலை |
| 8 | STREET | தெரு |
| 9 | MOON | நிலா |
| 10 | MILK | பால் |

# இரண்டு எழுத்துச் சொற்களை எழுதுக .

# 9. வீடு எங்கே ?

வண்ணக் கிளியே வீடெங்கே ?
மரத்துப் பொந்தே என் வீடு
தூக்கணாங் குருவி வீடெங்கே ?
தொங்குது மரத்தில் என் வீடு
கருப்புக் காகமே வீடெங்கே ?
கட்டுவேன் மரத்தில் என் வீடு
பொல்லாப் பாம்பே வீடெங்கே ?
புற்றும் புதருமே என் வீடு
கடுகடு சிங்கமே வீடெங்கே ?
காட்டுக் குகையே என் வீடு
நகரும் நத்தையே வீடெங்கே ?
நகருதே என்னுடன் என் வீடு.

அழ . வள்ளியப்பா








# 10. சின்ன சின்ன கடிகாரம்



சின்ன சின்ன கடிகாரம்
சிறப்பு மிக்க கடிகாரம்
என்றும் எங்கும் நேரத்தை
எடுத்துக்காட்டும் கடிகாரம்
அண்ணன் தம்பி போல் இங்கே
அழகு முட்கள் இரண்டுண்டு
ஒன்றன் பின்னே ஒன்றாக
ஓடிச் சுற்றி மணி காட்டும்
சின்ன சின்ன கடிகாரம்
சிறப்பு மிக்க கடிகாரம்.

# 11.புதிய ஆத்திசூடி

அச்சம் தவிர்.

ஈகைத் திறன்.

உடலினை உறுதி செய்.

எண்ணுவது உயர்வு.

நீதிநூல் பயில்.

புதியன விரும்பு.

ஞாயிறு போற்று.



- பாரதியார்

# பயிற்சிகள்

## அ. சொல்லும் பொருளும் .

1. அச்சம் - பயம்
2. பயில் - படி
3. ஞாயிறு - சூரியன்

## ஆ. எதிர்ச்சொல் எழுதுக .

1. உயர்வு X ........................
2. புதிய X ........................

## இ. உரிய விடையை எடுத்து எழுதுக.

| விரும்பு , உறுதி , திறன் ,பயில் |
|---|

1. உடலினை ..................... செய் .
2. நீதிநூல் ...............
3. புதியன .....................
4. ஈகைத் ...................

## ஈ. படத்துடன் புதிய ஆத்திசூடியைப் பொருத்துக.

1) 

ஞாயிறு போற்று

2) 

ஈகைத் திறன்

3) 

உடலினை உறுதி செய்

# 12. எண்

எண்ணிக்கையைக் குறிப்பது எண் எனப்படும்.

எண் இரண்டு வகைப்படும்.

அவை ஒருமை , பன்மை

ஒருமை - ஒன்றைக் குறிப்பது ஒருமை எனப்படும்

பன்மை - ஒன்றுக்கு மேற்பட்ட பலவற்றைக் குறிப்பது பன்மை எனப்படும்.

ஒருமை



பன்மை




கள்

ங்கள்

க்கள்


# கள்

| ஒருமை | பன்மை |
|---|---|
|  குடை |  குடைகள் |
|  பந்து |  பந்துகள் |
|  வீடு |  வீடுகள் |
|  நாய் |  நாய்கள் |
|  மீன் |  மீன்கள் |
|  இலை |  இலைகள் |

# ங்கள்

| ஒருமை | பன்மை |
|---|---|
| <br>பழம் | <br>பழங்கள் |
| <br>பட்டம் | <br>பட்டங்கள் |
| <br>சிங்கம் | <br>சிங்கங்கள் |
| <br>புத்தகம் | <br>புத்தகங்கள் |
| <br>மரம் | <br>மரங்கள் |

# க்கள்

| ஒருமை | பன்மை |
| --- | --- |
| <br>பூ | <br>பூக்கள் |
| <br>ஈ | <br>ஈக்கள் |
| <br>பசு | <br>பசுக்கள் |
| <br>தேனீ | <br>தேனீக்கள் |

## ஒருமைக்கேற்ற பன்மைச் சொற்களை எழுதுக .

| வ.எண் | ஒருமை | பன்மை |
|---|---|---|
| 1 | பந்து | |
| 2 | நாய் | |
| 3 | இலை | |
| 4 | மரம் | |
| 5 | சிங்கம் | |
| 6 | பட்டம் | |
| 7 | பூ | |
| 8 | தேனீ | |

**படம் பார்த்து உனக்குத் தெரிந்ததைக் கூறுக.**



# 13. ஓடி விளையாடு பாப்பா




பள்ளியில் இருந்து வீடு திரும்பிய வளவனும் அமுதாவும் அம்மாவின் செல்போனுக்காகச் சண்டை போட்டுக்கொண்டனர்.



சத்தம் கேட்டு அம்மா சமையல் அறையில் இருந்து வந்து எப்பவும் செல்போனில் என்ன விளையாட்டு? என்று கோபமாகக் கேட்டாள். அம்மா! அம்மா கொஞ்ச நேரம் அம்மா என்று குழந்தைகள் அடம்பிடித்தனர்.



என்ன ஒரே சத்தம்? என்று கேட்டார் அப்பா.செல்போனில் விளையாட்டு அதற்காகச் சண்டை என்றாள் அம்மா.



ஓடியாடி விளையாடினால்
உடல் சுறுசுறுப்பாகும் , நோய் இல்லாமல்
வாழலாம் என்றார் அப்பா

உடனே அம்மா பாரதியார் எழுதிய 'ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்து இருக்கலாகாது பாப்பா' என்ற பாடலைப் பாடினாள். சரிப்பா ! நாங்க இனிமே வெளியே போய் விளையாடறோம் என்று வளவனும் அமுதாவும் விளையாடச் சென்றனர்.

# பயிற்சிகள்

## அ. கோடிட்ட இடங்களைச்  சரியான சொல்லால் நிரப்புக.

1. அம்மா சமையல் ............யில் இருந்து வந்தாள்.( அரை / அறை )

2. அம்மாவின் செல்போனுக்காகச்................. போட்டுக்கொண்டனர். ( சண்டை / சன்டை )

## ஆ. உரிய விடையை எடுத்து எழுதுக.

| |
|---|
| உடல்   ,   பாரதியார்   ,  விளையாட |

1. வளவனும் அமுதாவும்...........................ச் சென்றனர்.

2.ஓடியாடி விளையாடினால் ................. சுறுசுறுப்பாகும்.

3.ஓடி விளையாடு பாப்பா  பாடலை எழுதியவர் ........................


# 14. ஆங்கில மாதங்கள்

| | |
|---|---|
| ஜனவரி | ஜூலை |
| பிப்ரவரி | ஆகஸ்டு |
| மார்ச் | செப்டம்பர் |
| ஏப்ரல் | அக்டோபர் |
| மே | நவம்பர் |
| ஜூன் | டிசம்பர் |

- நீ பிறந்த ஆங்கில மாதம் ---------------------------
- உன் அப்பா பிறந்த ஆங்கில மாதம் ---------------------------
- உன் அம்மா பிறந்த ஆங்கில மாதம் ---------------------------




# 15. உடல் உறுப்புகள்



| வ.எண் | தமிழ் | ENGLISH |
|---|---|---|
| 1 | தலைமுடி | HAIR |
| 2 | கண் | EYE |
| 3 | மூக்கு | NOSE |
| 4 | கழுத்து | NECK |
| 5 | மார்பு | CHEST |
| 6 | வயிறு | STOMACH |
| 7 | கால் விரல்கள் | TOES |
| 8 | புருவம் | EYE BROW |
| 9 | காது | EAR |
| 10 | வாய் | MOUTH |
| 11 | கை | HAND |
| 12 | கை விரல்கள் | FINGERS |
| 13 | கால் | LEG |
| 14 | பாதம் | FEET |
| 15 | இடுப்பு | HIP |
| 16 | நெற்றி | FOREHEAD |

**உடல் உறுப்புகளின் பெயர்களைக் கட்டத்தில் நிரப்புக .**



**விரல், நெற்றி, கால், மூக்கு, தலைமுடி, வாய் , கன்னம், பல், கை, காது, கண், நாக்கு, கழுத்து, இடுப்பு, தலை, வயிறு, கை விரல்கள்**

## படம் பார்த்து உனக்குத் தெரிந்ததைக் கூறுக.



# அகர வரிசைப்படுத்துக

பாதம் பிள்ளை புல் பொங்கல் பகல்

பீரங்கி பூனை பேட்டி பெண்

பை பௌவம் போ

ப - ________________

பா - ________________

பி - ________________

பீ - ________________

பு - ________________

பூ - ________________

பெ - ________________

பே - ________________

பை - ________________

பொ - ________________

போ - ________________

பௌ - ________________

# 16. உரையாடல்

வகுப்பறையில்

மாணவர்கள் : வணக்கம் ஆசிரியரே!

ஆசிரியர் : வணக்கம் மாணவர்களே ! நாளை உங்கள் அனைவரையும் ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்லப் போகிறேன் .

மாணவர்கள் : எங்கு ஆசிரியர் ? எங்கு ஆசிரியர் ?

ஆசிரியர் : நம் நாட்டின் தேசிய விலங்கு எது ?



அமுதன் : புலி

ஆசிரியர் : நன்று.

ஆசிரியர் : காட்டிற்கு இராஜா யார்?

இனியன் : சிங்கம்

ஆசிரியர் : நன்று. உங்களுக்குப் பிடித்த விலங்கு எது ?

அமுதன் : யானை ! யானை !

செழியன் : கரடி

இனியன் : குரங்கு , முயல்

ஆசிரியர்: இவற்றை எல்லாம் நாம் எங்குப் பார்க்கலாம் ?

இனியன் : காடு

அமுதன் : ZOO

ஆசிரியர் : தமிழில் ZOO வை உயிரியல் பூங்கா என்பர். அங்கு விலங்குகளை மட்டுமா பார்ப்போம் ?

அமுதன் : இல்லை ஆசிரியர் பறவைகளும் இருக்கும்.

ஆசிரியர் : நம் நாட்டின் தேசியப் பறவை எது ?

இனியன் : மயில் ஆசிரியர் .



ஆசிரியர் : நாளை நாம் அனைவரும் உயிரியல் பூங்காவிற்குப் போகலாம் . பறவைகள் , விலங்குகள் எல்லாவற்றையும் பார்க்கலாம் .




தேசிய விலங்கு ( NATIONAL ANIMAL ) புலி - TIGER



தேசியப் பறவை ( NATIONAL BIRD ) மயில் - PEACOCK



# தெரிந்து கொள்வோம் .

| விலங்குகள் - ANIMALS | பறவைகள் - BIRDS |
| --- | --- |
| <br>சிங்கம்<br>LION | <br>கிளி<br>PARROT |
| <br>யானை<br>ELEPHANT | <br>காகம்<br>CROW |
| <br>கரடி<br>BEAR | <br>புறா<br>DOVE |
| <br>குரங்கு<br>MONKEY | <br>குருவி<br>SPARROW |
| <br>முயல்<br>RABBIT | <br>கழுகு<br>EAGLE |

# படம் பார்த்துப் பெயர் எழுதுக.













## சொல் உருவாக்குக.

| | | | | |
|---|---|---|---|---|
| த | ம் | ங் | க | கோ |
| வ | ட | ல் | டு | ப |
| ண் | ள் | மா | ளி | கீ |
| ர | ரை | ம | கை | கொ |
| பு | லை | ழி | லி | டி |

# 17. மரம் வளர்ப்போம்!



தேன்மொழி தன் தாத்தா பாட்டியுடன் பூங்காவிற்குச் சென்றாள். அங்குச் சறுக்கு மரத்தில் விளையாடினாள் .




அவளுடைய தோழிகள் யாழினியும், குமுதாவும் வந்தார்கள். அவர்கள் சந்தையில் பறவைகள் வாங்கி வளர்க்கப் போவதாக மகிழ்ச்சியுடன் சொன்னார்கள் .



அப்போது தாத்தா நீ எங்குத் தங்குவாய் ? என்று கேட்டார். தோழிகள், வீட்டில்தான் என்றார்கள் .








மாலை நேரம், பறவைகளைக் காட்டி இவை எங்குத் தங்கும்? என்று பாட்டி கேட்டார். தேன்மொழி மரத்தில் கூடு கட்டி வாழும் என்றாள் . மகிழ்ச்சியுடன் பறந்து திரியும் பறவைகளைக் கூண்டில் அடைக்கலாமா?என்றார் தாத்தா.பின்னர் பறவையை எப்படித்தான் வளர்ப்பது ? என்றாள் தேன்மொழி .









" கிளி வளர்த்தேன் பறந்து விட்டது.
அணில் வளர்த்தேன் ஓடி விட்டது.
மரம் வளர்த்தேன் இரண்டும் திரும்பி வந்து விட்டன " என்று அப்துல் கலாம் ஐயா அவர்கள் கூறியுள்ளார்.





உடனே பாட்டி மரம் வளர்ப்பதால் ஏற்படும் பயன்களைக் கூறினார்.



- மழை தரும்.
- காய் , கனிகள் தரும்.
- நிழல் தரும் .

இவற்றைக் கேட்ட தோழிகள் சந்தைக்குச் சென்று மரக்கன்றுகள் வாங்கி நடப்போவதாகக் கூறினர் .

**மரம் வளர்ப்போம் ! பயன் பெறுவோம் !**

# தெரிந்து கொள்வோம்.

| வ . எண் | ஒருமை | பன்மை |
| --- | --- | --- |
| 1 | பூங்கா | பூங்காக்கள் |
| 2 | மரம் | மரங்கள் |
| 3 | கனி | கனிகள் |
| 4 | பறவை | பறவைகள் |
| 5 | கூடு | கூடுகள் |
| 6 | தோழி | தோழிகள் |

# பயிற்சிகள்

## அ. பிரித்து எழுதுக.

1. மரக்கன்றுகள் = .......................................

## ஆ. கோடிட்ட இடங்களை உரிய சொல்லால் நிரப்புக.

1. கிளி வளர்த்தேன் .................. விட்டது. ( பரந்து பறந்து)

2. பறவைகள் ..................... பறந்தன. ( வானத்தில் / வாணத்தில் )

## இ. உரிய விடையை எடுத்து எழுதுக.

| |
|---|
| **சந்தைக்குச் , சறுக்குமரத்தில் , பூங்காவிற்குச்** |

1. தேன்மொழி ............................. சென்றாள்.
2. தோழிகள் ..................... செல்வதாகக் கூறினர்.
3. தேன்மொழி ................ விளையாடினாள்.

# மூன்று எழுத்துச் சொற்கள்

| வ.எண் | ENGLISH | தமிழ் |
|---|---|---|
| 1 | SCHOOL | பள்ளி |
| 2 | COMPUTER | கணினி |
| 3 | MONEY | பணம் |
| 4 | WATER FALL | அருவி |
| 5 | BANK | வங்கி |
| 6 | SEA | கடல் |
| 7 | AIR | காற்று |
| 8 | SKY | வானம் |
| 9 | LAND | நிலம் |
| 10 | TEMPLE | கோவில் |

**மூன்று எழுத்துச் சொற்களை எழுதுக .**

# நான்கு எழுத்துச் சொற்கள்

| வ.எண் | ENGLISH | தமிழ் |
|---|---|---|
| 1 | SHIP | கப்பல் |
| 2 | LETTER | கடிதம் |
| 3 | MIRROR | கண்ணாடி |
| 4 | JAGGERY | வெல்லம் |
| 5 | BUS | பேருந்து |
| 6 | FIRE | நெருப்பு |
| 7 | CITY | நகரம் |
| 8 | VILLAGE | கிராமம் |
| 9 | LIBRARY | நூலகம் |
| 10 | GARDEN | தோட்டம் |

**நான்கு எழுத்துச் சொற்களை எழுதுக .**

_______________ _______________ _______________

_______________ _______________ _______________

# தெரிந்து கொள்வோம்

| | |
|---|---|
| நீ என்னுடன் விளையாட வருகிறாயா ? | Are you coming to play with me ? |
| நான் உன்னுடன் வருகிறேன் . | I am coming with you. |
| உனக்கு என்ன பிடிக்கும் ? | What do you like ? |
| உணவை வீணாக்காதே ! | Don't waste food. |
| இப்பொழுது மணி எட்டு. | It is 8 O'clock. |
| என்ன சாப்பிடலாம் ? | What do you like to have? |
| நேற்று நான் கடற்கரைக்குச் சென்றேன். | Yesterday I went to the beach |
| எனக்கு மாம்பழம் பிடிக்கும். | I like mango. |
| எனக்குச் சொல்லித் தருகிறாயா ? | Will you teach me ? |
| வகுப்பறையைச் சுத்தமாக வைக்கவும். | Keep the Classroom clean. |

********